
AR
733

சுயமரியாதைச் சூரர்

# ஏ.வி.பி.ஆசைத்தம்பி



செ.திவான்

# சுயமரியாதை சூரர்

# ஏ.வி.பி. ஆசைத் தம்பி

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,
அரசியல் ஆய்வு மைய உறுப்பினர்
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்

நஜாத் பதிப்பகம்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 63–ஆவது நூல்

முதற் பதிப்பு : சூலை, 2007

கனினி வடிவமைப்பு : நான்சி கணினியகம், பாளையங்கோட்டை.

முகப்போவியம் : கோரல், பாளையங்கோட்டை.

அச்சிட்டோர் : சிவசக்தி அச்சகம், சிவகாசி.

விலை : ரூபாய் பத்து

## எண்ண அலைகள்

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளர் தமிழர் தலைவர் திருமிகு **வைகோ** அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் கழகத்தின் அதிகாரபூர்வ, வார ஏடாகிய 'சங்கொலி'யில் 09.06.2006 முதல் 07.07.2006 வரை அஞ்சா நெஞ்சன், சுயமரியாதை சூரர், வாலிபப் பெரியார் **ஏ.வி.பி. ஆசைத் தம்பி**யின் வரலாற்றுக் குறிப்புகளை கட்டுரையாக எழுதினேன். அதுதான் இச்சிறு நூல் . . .

நூலில் பிழை திருத்தி கைமாறு கருதாது உதவிடும் மதிமுக மாநில இலக்கிய அணி புரவலர் அண்ணன் ஐ. சாமுவேல் அவர்களுக்கும், நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த சிவகாசி, சிவசக்தி ஆர்ட்ஸ் கு. குமரேசன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செ. திவான்,
106F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665



# சுயமரியாதை சூரர்
# ஏ.வி.பி. ஆசைத் தம்பி

“திராவிடர் இயக்கத்தின் வரலாறு அறிய வேண்டும்; எந்தெந்தக் காலத்தில் என்ன நடைபெற்றது என்பதை அறிந்திருந்தால்தான் அதை நிகழ்காலத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து எதிர்காலத்திலே எப்படி நடத்த வேண்டும் என்பதைத் திட்டமிடுவதற்கு, கடந்த காலத்தினுடைய நடவடிக்கைகள் நமக்குப் பாடமாக அமைகின்றன” என்பர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல்; நமது இயக்கம் ஆறு இடங்களில் வெற்றி; குறிப்பாக பெருந்தலைவர் காமராசரும், வாலிபப் பெரியார் ஏ.வி.பி. ஆசைத் தம்பியும் பிறந்த விருதுநகரில், நமது வேட்பாளர் இரா. வரதராஜன் வாகை சூடியுள்ளார்.

சுயமரியாதை உணர்வுகள் சுடர்விட்டுப் பிரகாசித்த பூமியில் மறுமலர்ச்சி தி.மு.கழகம் வெற்றி கண்டுள்ளது. இங்கு பிறந்து வளர்ந்து பெரும் புகழ் பெற்ற சுயமரியாதை சூரர் ஏ.வி.பி. ஆசைத் தம்பியின் வரலாறு . . .

பெரியவர் ஆசைத் தம்பி - அவரது

புதல்வர் வன்னியப் பெருமாள் - அவரது

குமாரர் பழனியப்பன் - அவரது

பிள்ளை ஆசைத்தம்பி

ஆ.வ.ப. ஆசைத் தம்பி; பிறந்தது 24.09.1924-இல்; அவரது தாயார் நாகம்மா.

**க்ஷத்ரிய வித்தியாசாலை**

ஆறாம் வகுப்பு வரை ஆசைத்தம்பி, விருதுநகரில் சத்திரிய வித்தியாசாலையில் பயின்றார்; பின்னர் பாளையங்கோட்டை ஜான்ஸ் மிடில் ஸ்கூலில் போர்டிங்கிலிருந்து படித்து வந்தார்.

(7, 8 வகுப்புகள்), ஒன்பதாம் வகுப்பை விருதுநகர் நாடார் டவுண் ஹைஸ்கூலில் படித்தார். பின்னர் க்ஷத்ரிய வித்தியாசாலை உயர்நிலைப் பள்ளியில் படிக்கத் துவங்கினார். படிப்பினை நிறைவு செய்யவில்லை. படையெடுத்தார்; பயன் அளிக்கவில்லை; பள்ளிப் படிப்பை பாதியிலே மூட்டை கட்டி வைத்துவிட்டார்.

### இளைஞர் கழகம்

பள்ளியில் படிக்கும்போதே நல்ல பேச்சாளராக வரவேண்டும் என்ற அவரது ஆசை வளர்ந்தது. 'இளைஞர் கழகம்' கண்டார். அடிக்கடி பேசும் வாய்ப்பு பெற்றார். தனது பேச்சுக்கலையைத் திறம்பட வளர்த்தார்.

### கே.டி.கே. தங்கமணி

பார்-அட்லா பட்டம் பெற்று வெளிநாட்டிலிருந்து திரும்பிய கே.டி.கே. தங்கமணியை முதன்முதலாக மேடையேறிப் பேச வைத்தவர் ஆசைத்தம்பி. இளைஞர் கழகம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் எந்தக் கட்சியையும் அப்போது சேராத கே.டி.கே. தங்கமணியை அழைத்து வந்து நிகழ்ச்சி நடத்தியவர் ஆசைத்தம்பி.

### 1942 ஆகஸ்ட் 9

ஆயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் 1942 ஆகஸ்ட் 9-இல் முதன் முதலாக ஏ.வி.பி. ஆசைத்தம்பி பேசினார். அன்று 45 நிமிடங்கள் அவர் உரையாற்றினார்.

### திராவிட தொண்டர் படை

1942-இல் அறிஞர் அண்ணாவின் தலைமையில் நடைபெற்ற திராவிட தொண்டர்படை மாநாட்டில் ஆசைத்தம்பி கலந்து கொண்டு பெரும் பணியாற்றினார்.

### கன்னடப் பகுதியில் வணிகம்

கொஞ்ச காலம் கன்னடப் பகுதியில் வணிகப் பணிகளுக்காகச் சென்றார் ஆசைத்தம்பி.



### 1943-களில்

ஆசைத்தம்பி முதன் முதலாக 1943-ஆம் ஆண்டில் எழுதத் துவங்கினார். வியாபார விஷயமாய் கன்னட நாட்டிலிருந்த போது தன் பேனாவின் வன்மையைக் காட்டத் துவங்கினார்.

### பாகிஸ்தான் ஏன் பிரிய வேண்டும்?

சிபா. ஆதித்தனார் அவர்களால் நடத்தப்பெற்ற 'தமிழன்' வார ஏட்டில், பாகிஸ்தான் ஏன் பிரிய வேண்டும்? என்ற கட்டுரையை முதன்முதலாக எழுதத் துவங்கினார். முதற் கட்டுரைக்கே சன்மானமாக ஒரு ரூபாய் அன்பளிப்பாகப் பெற்றார். எழுத்துலகில் முதல் படைப்பே அவருக்கு வெற்றியை ஈட்டித் தந்தது.

### முதன் முதலில் இவரது எழுத்துகள் ஓர் ஆய்வு

'முதன் முதலில் இவரது எழுத்துகள் நாரண துரைக் கண்ணனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த பிரசண்ட விகடன் பத்திரிகையில் வெளிவந்தது' (க. திருநாவுக்கரசு, திராவிட இயக்கத் தூண்கள், 1999, ப. 274) என்பர்; ஆனால், திராவிட இயக்க வரலாற்றின் பக்கங்களை, நுண்ணியமாக ஆராய்ந்தபோது, 1943-இல் 'தமிழன்' பத்திரிகையில் இவரது முதல் படைப்பு வெளிவந்துள்ளது என்பது தெரிய வருகிறது (ஆசைத்தம்பி சிற்றரசு - கலைச்செல்வன், 1953, சென்னை கலை மன்றம் வெளியீடு, ப. 30).

இன்னும் இதனை நுணுகி ஆராய்கிற போது மேலும் பல செய்திகள் கிடைக்கின்றன.

### 14.04.1943 திராவிட நாடு

'திராவிட நாடு பற்றிப் பெரியாரின் பொன்மொழிகள்' என்ற கட்டுரை ஆ.வ.ப. ஆசைத் தம்பியால் எழுதப்பட்டு, 14.07.1943 திராவிட நாடு இதழில் பக்கம் 5-இல் வெளிவந்துள்ளது.

### 08.08.1943 திராவிட நாடு

'ஜஸ்டிஸ் கட்சிக்குப் புதிய அமைப்பு வேண்டும்' என்ற ஆ.வ.ப. ஆசைத்தம்பியின் கட்டுரை 08.08.1943 திராவிட நாடு பக்கம் 7-இல் வெளிவந்துள்ளது.

### முதல் நூல்

குடிஅரசு, திராவிட நாடு போன்ற இயக்க ஏடுகளில் ஆசைத் தம்பியின் கட்டுரைகள் வெளியாகி தோழர்களுக்கு நல்ல விருந்தளித்தது. கட்டுரை வடிவில், பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருந்த நேரத்தில், புத்தக உருவிலும் ஆசைத் தம்பி அவர்களின் எழுத்து நடமாட வேண்டும் என்று விரும்பி இளைஞர் கழகத்தார் ஆசைத்தம்பியின் முதல் நூலை வெளியிட்டனர்.

### திராவிடர்கள்

மூன்று அணா விலையில் (18 பைசா) திராவிடர்கள் என்ற புத்தகம் தான் ஆசைத்தம்பி எழுதிய முதல் புத்தகம்.

### குடிஅரசு

06.06.1944 குடிஅரசு இதழில் (ஈரோடு) பக்கம் 11-இல் ஆ.வ.ப. ஆசைத்தம்பியின் 'திராவிடர்கள்' நூலுக்கு மதிப்புரை வந்துள்ளது. இதனை பு. இராசதுரை, சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்கள் ஆற்றிய தொண்டு என்ற தனது நூலில், (1992) பக்கம் 92-இல் தெரிவித்துள்ளார்.

### விடுதலை 20.09.1944

'விருதைவாசிகளே எழுமின் - செயலாற்ற எழுமின்' என்ற தலைப்பில் ஆ.வ.ப. ஆசைத்தம்பி விருதை (விருதுநகர்) மக்களைத் திராவிடர் கழகத்தில் உறுப்பினராகக் கோரி ஒரு அறிக்கை வெளியிட்டார். அது 20.09.1944 விடுதலை இதழில் வெளிவந்துள்ளது.

### கோவில் நுழைவு

விருதுநகர் நாடார்களின் மாரியம்மன் பொங்கல் திருவிழாவின்போது 10.04.1944 அன்று மு.அ. பழனியப்பன், வைத்தி, வி.வி. இராமசாமி, எம்.எஸ். பெரியசாமி நாடார், இவர்களின் உழைப்பால் ஆதி திராவிடர்கள் மாரியம்மன் கோவிலுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று, ஆ.வ.ப. ஆசைத்தம்பி குடி அரசு 15.04.1944 பக்கம் 12-இல் எழுதினார்.



### மறுமலர்ச்சியைப் பெற

'ஆசைத்தம்பி மாணவராக வெளியே வந்து பெரியார் அவர்களுடைய இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டு, சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்புவதில் தீவிரமாக இருந்து பகுத்தறிவுக் கருத்துக்களை மக்களிடத்திலே எடுத்துச் சொல்லி சமுதாய அடிப்படையிலே மக்கள் எப்படிப்பட்ட மறுமலர்ச்சியைப் பெற வேண்டுமோ அந்த லட்சியத்தோடு சொற்பொழிவுகளை ஆற்றி வந்தார் என்று பேராசிரியர் க. அன்பழகன், ஏ.வி.பி. ஆசைத்தம்பி நினைவு நாள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போது புகழாரம் சூட்டினார். (விடுதலை 13.04.1983, ப. 3)

### வாலிபப் பெரியார்

'ஆசைத் தம்பி அவர்கள் தமிழ்ச் சமுதாயப் பெருங்குடி மக்களால் 'வாலிபப் பெரியார்' என்று அழைக்கத்தக்க அளவிற்குக் கொள்கை வெறி கொண்டவராக, இலட்சிய தாகம் கொண்டவராக விளங்கியவர். இளமைக் காலம் தொட்டு திராவிடர் இயக்கத்தினுடைய ஒரு பெரும் தூணாக விளங்கியவர். சுயமரியாதை இயக்கத்தைத் தென்பாண்டி மண்டலத்தில் வளர்த்த பெருமை, வலுவேற்றிய பெருமை டபிள்யூ.பி.ஏ. சௌந்திர பாண்டியன் அவர்களையே சாரும். அவருடைய பேச்சை நான் இளமைக் காலத்தில் கேட்டபோது எனக்கு மெய் சிலிர்த்தது. அப்படிப்பட்ட மாபெரும் சுயமரியாதை வீரனின் பெயரைத் தன் மகனுக்குச் சௌந்தர பாண்டியன் என்று சூட்டி ஆசைத் தம்பி மகிழ்ந்தார் என்பர் கலைஞர் மு. கருணாநிதி (சௌந்தர பாண்டியன் - விஜயா மணவிழா உரை, முரசொலி, 31.08.1984 ப. 1. 2).

ஆசைத் தம்பி தனது மகனுக்குச் சௌந்தர பாண்டியன் என்று சூட்டி மகிழ்ந்தது உண்மைதான். அதற்கு மேலும் தனது

இன்னொரு மகனுக்கு 'காந்தி'யின் பெயரையும் சூட்டி மகிழ்ந்துள்ளார்.

**வங்கத்துச் சிங்கம்**

வங்கத்துச் சிங்கம் நேதாஜி கருத்துமாச்சரியங்கள் இருந்த போதிலும் தனது இந்திய தேசிய இராணுவப் பிரிவிற்கு 'காந்தி ரெஜிமண்ட்' என்று பெயர் சூட்டி மகிழ்ந்தது போல, ஆ.வ.ப. ஆசைத் தம்பியும் தனது மகனுக்கு 'காந்தி'யின் பெயரைச் சூட்டி உள்ளார்.

**1944 மே 28 திருமணம்**

திராவிடத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் 1944 மே 28-இல் ஆசைத்தம்பியின் திருமணத்தை நடத்தி வைத்தார். தோழியர் பரமேஸ்வரியை திருமணம் செய்து கொண்ட ஆசைத் தம்பிக்கு, சில ஆண்டுகள் சென்ற பின் ஆண் குழந்தை பிறந்தது.

**ஆகஸ்ட் 15**

ஆசைத்தம்பிக்கு குழந்தை பிறந்த நாள் ஆகஸ்ட் 15. ஆகவே உலகப் பெரியார் காந்தியவர்களின் நினைவாக காந்திராஜன் என்று பெயர் சூட்டினார். அதன் பின் மகள் பிறந்தாள்; அதன் பின் பிறந்த மகனுக்கு பட்டி வீரன்பட்டி சௌந்திர பாண்டியனாரின் நினைவாக சௌந்திரபாண்டியன் என்று பெயர் சூட்டினார். மகன்கள் இருவரும் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள்.

**திராவிட மாணவர்கள் மாநாடு**

1944 ஜுன் மாதம் நான்காம் நாள் விருதுநகரிலே திராவிட மாணவர்கள் மாநாடு. அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் ஆசைத்தம்பி. அந்த மாநாட்டில் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன், கே.ஏ. மதியழகன், ஜனார்த்தனம் முதலியோர் கலந்து கொண்டனர். மாநாட்டிற்குத் தோழர் V.V. இராமசாமி தலைமை வகித்தார்.



1944 ஆகஸ்டில், சேலத்தில் நடைபெற்ற மாநாட்டிற்குப் பிறகு 'திராவிடர் கழகம்' உதயமாயிற்று. திராவிடர் கழகத்தில் தீவிரப் பணியாற்றினார். மதுரையிலே கருப்புச் சட்டை மாநாடு நடைபெற்றது (1946 மே 11 இல்).

**குடந்தை சுயமரியாதை மாநாடு**

குடந்தையில் சுயமரியாதை மாநாடு, மதுரையில் நடந்த கருப்புச்சட்டை மாநாட்டிற்கு அடுத்த வாரமே நடைபெற்றது. அந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பை ஆசைத் தம்பி பெற்றார்.

**தனி அரசு**

ஆசைத் தம்பியின் எண்ணங்களும், உள்ளக் கிளர்ச்சிகளும் நாளுக்கு நாள் மிகுவதாயிற்று. புதிய கருத்துக்கள் அடிக்கடி சிந்தையில் எழுந்தன. தனது எண்ணங்களை அப்படியே ஏட்டில் தீட்டிக் காட்ட விரும்பினார். 1948-இல் 'தனி அரசு' என்னும் மாத இதழைத் துவக்கினார். அதில் பல கதைகளும் கட்டுரைகளும் மிளிர்ந்தன. அவைகளில் பெரும்பான்மை ஆசைத்தம்பி அவர்களே எழுதுவார். அவைகளைத் திரட்டி நூல் வடிவில் வெளியிட விரும்பினார்.

**தூத்துக்குடி மாநாடு**

1948 மே 8, 9 தேதிகளில் தூத்துக்குடியில் மாகாண திராவிடர் கழக மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் திராவிட நாட்டுப் படத்தை திறந்து வைத்து ஆசைத்தம்பி அழகிய சொற்பொழிவாற்றினார். (திராவிட நாடு படத்தை அறிஞர் அண்ணா திறக்க வேண்டும்; ஆனால் அண்ணா வரவில்லை. மாநாட்டிற்கு அறிஞர் அண்ணா வராததை எம்.ஆர். ராதா கண்டித்துப் பேசினார்; நடிகவேள் மாநாட்டில் நஞ்சு கலந்தார் என்றார் கலைஞர் மு. கருணாநிதி)

**ஈரோடு மாநாடு**

ஈரோட்டில் 19-வது மாகாண திராவிடர் கழகத் தனி(ஸ்பெஷல்) மாநாடு 1948 அக்டோபர் 23, 24 தேதிகளில்

நடைபெற்றது. இதில் தாளமுத்து நடராசன் படத்தை ஏ.வி.பி. ஆசைத் தம்பி திறந்து வைத்தார். (உண்மையில் மாநாட்டில் ஒரு படமும் வைக்கப்படவில்லை; கற்பனையாகக் காண வேண்டும் என்று பெரியார் கூறிவிட்டார். எப்படி பெரியாரது சிக்கனம்?)

**திருக்குறள் மாநாடு**

*1949* பொங்கல் வாரத்தில், ஜனவரி 15, 16 நாட்களில் 'வள்ளுவர் குறள் மாநாடு' பெரியார் நடத்தினார். தெ.பொ. மீனாட்சி சுந்தரனார், நாவலர் ச. சோமசுந்தர பாரதியார், திரு.வி.க., ஏ. சக்கரவர்த்தி நயினார் போன்ற தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர்.

**விருதுநகரில் திருக்குறள் மாநாடு**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமை தாங்கிட, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தரபாரதியார் கலந்து கொண்ட திருக்குறள் மாநாடு விருதுநகரிலே நடைபெற்றது. மாநாட்டின் வரவேற்புக்கு செயலாளராக இருந்து வெற்றிகரமாக நடத்திக் காட்டியவர் ஆசைத்தம்பி.

**திராவிடர் கழகத்தில்**

நகரக் கழகச் செயலாளர், மாவட்டக் கழகத்தின் செயலாளர், மாகாணக் கமிட்டி செயற்குழு உறுப்பினர் ஆகிய பதவிகளில் இருந்து ஆசைத்தம்பி திராவிடர் கழகத்தில் பணியாற்றினார்.

**அண்ணாவின் தி.மு.கழகத்தில்**

மாவட்டக் கழக உறுப்பினர்; பொதுக்குழு உறுப்பினர்; மத்திய செயற்குழு உறுப்பினர்; கழகச் சொத்துப் பாதுகாப்புக் குழுவில் ஓர் அங்கத்தினர். இவை ஆசைத் தம்பி அறிஞர் அண்ணாவின் தி.மு. கழகத்தில் ஆரம்ப காலத்தில் வகித்த பொறுப்புக்கள் ஆகும்.

**செங்கற்பட்டு மாவட்ட முதல் மாநாடு**

காஞ்சித் தலைவன் அண்ணாவின் பூமியில் மாநாடு - செங்கற்பட்டு மாவட்ட முதல் மாநாடு. 1950 டிசம்பர் 23, 24 நாட்களில் நடைபெற்றது. மாநாட்டைத் தொடங்கி வைத்தவர் ஏ.வி.பி. ஆசைத் தம்பி.



**திண்டுக்கல் மாநாடு**

திண்டுக்கல்லில் நடைபெற்ற எழுத்துரிமை பேச்சுரிமை மாநாட்டிற்கும் தோழர் ஆசைத்தம்பி அவர்களே திறப்பாளர்.

**ஐயோ வேகுதே நெஞ்சம்**

உத்தமர் காந்தியார் கொலைக்குக் காரண காரியங்களையும், இன்னும் இது போல கொலைகள் நடவாமல் இருக்கச் செய்ய வேண்டிய காரியங்களையும் விளக்கி தன் வருத்தத்தை தன் பத்திரிகையான 'தனியரசில்', 'ஐயோ வேகுதே நெஞ்சம்' என்ற தலைப்பில் எழுதினார் (1949 ஏப்ரல்)

**காந்தியார் சாந்தி அடைய**

அதன் பிறகு அந்த அரிய கட்டுரை 'காந்தியார் சாந்தி அடைய' என்னும் பெயருடன் புத்தக உருவில் வெளிவந்தது 1/8 கிரவுன் சைஸ் 12 பக்கங்களைக் கொண்ட அந்த நூலின் விலை அணா இரண்டு.

**கலிய பெருமாள் நாயுடு**

துறையூர் நடராஜா பிரசில் அச்சடிக்கப்பட்டு, எரிமலைப் பதிப்பகம் சார்பில் அந்த நூலை வெளியிட்டவர் கலியபெருமாள் நாயுடு ஆவார்.

**நூலுக்குத் தடை**

அரசாங்கம் அந்த நூலை தடைசெய்தது. ஆசைத் தம்பியையும், கலியபெருமாளையும் நீதிமன்றத்திலே கொண்டு வந்து நிறுத்தியது.

**இலங்கையில் இலவசமாக**

'காந்தியார் சாந்தி அடைய' நூல் தடை செய்யப்பட்டவுடன் மக்கள் அதை அதிகமாக விரும்பி,

அந்தரங்கமாகப் படிக்க ஆரம்பித்தார்கள். இலங்கையில் இந்த நூலை அச்சிட்டு இலவசமாகவே வழங்கினர்.

**மலையாள மொழிபெயர்ப்பு**

காந்தியார் சாந்தியடைய மலையாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டு கேரளத்தில் விநியோகிக்கப்பட்டது.

**சம்மன்**

திருச்சி ஜில்லா முசிறியில் இருக்கும் சப் டிவிஷனல் மேஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் ஆஜராகுமாறு சம்மன் ஆசைத் தம்பிக்குப் பறந்தது. 153A பிரிவுப்படி வகுப்பு துவேஷத்தை உண்டாக்கிய குற்றம் அவர் மீது சுமத்தப்பட்டிருந்தது. நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுகளில் அவர் ஏறி இறங்கிய வரலாறு அது குறித்து அவரே விரிவாக எழுதியுள்ளார்.

**நீதியின் பாதை நெடுந்தூரத்திலே**

கழகத்தின் வலிமை மிக்க தூதராக, நிலைகுலையாத நெஞ்சம் கொண்டவராக, அய்யாவின் தொண்டராக, அண்ணாவின் அருமைத் தம்பியாகத் திகழ்ந்த ஆசைத்தம்பி எழுத்துரிமை காத்திட பட்ட இன்னல்கள்

சிறைவாசம், நிர்வாணப்படுத்தப்படல், மொட்டையடிக்கப்படல், கைவிலங்கு பூட்டி, வீதி வழியாக அழைத்துச் செல்லப்படுதல், அவர் பட்ட இன்னல்கள் - சித்திரவதைகள் . . . அவரது மொழியிலேயே இதோ . . .

**தங்கக் கைகளும், இரும்புக் கால்களும்**

விருதுநகரிலே இரவு 9 மணிக்கு இரயிலேறி, மறுநாள் காலை 4 மணிக்கு திருச்சி வந்து, 7 மணி பஸ்சுக்கு முசிறி புறப்பட்டு, 24 மைல்கள் கடந்து முசிறி சேர்ந்து ஆஜரானேன். கோர்ட்டில் வழக்கு எடுக்கப்பட்டது. ஒத்தி வைக்கப்பட்டது. என் வழக்கு முடிவதற்குள் இரண்டு மாஜிஸ்ட்ரேட்டுகள் மாறினர். வழக்கு நடந்தது, நடந்தது சுமார் ஒரு வருடம். நானும் வந்தேன் வந்தேன் ரயிலிலும் பஸ்ஸிலும்.



கோர்ட்டுக்கு வரவேண்டுமென்றால் . . . "தங்கக் கைகளும் இரும்புக் கால்களும் வேண்டும்" என்று ஒரு பழமொழி இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னிடத்திலே கொஞ்சம் தங்கக் கையும், இரும்புக் காலும் இருந்திருக்கத்தான் வேண்டும்! இல்லாவிட்டால் இவ்வளவு நாள் நடந்த வழக்கிற்கு வந்திருக்க முடியுமா!

**திராவிடக் கந்தன்**

அன்று செவ்வாய்க்கிழமை; தீர்ப்பு சொல்லப்படும் நாளாக இருந்தது; ஆனால் மறுதினம் ஒத்திவைக்கப்பட்டது. முசிறி நண்பர் திரு. திராவிடக் கந்தன் அவர்கள் இரவு தங்க வீடு வசதி அமைத்துக் கொடுத்தார். விளக்கை அணைத்துவிட்டு படுத்தோம். ஒரே கும் இருட்டு. சிறைச்சாலையின் ஒத்திகையோ என்றுகூட நினைத்தேன்.

**அறிஞர் அண்ணாவின் தந்தி**

மறுநாள் புதன்கிழமை; காலை 11 மணிக்கெல்லாம் கோர்ட்டுக்கு வந்தோம்; திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் திரு சி.என். அண்ணாதுரை அவர்களிடமிருந்து கோர்ட்டுக்கே, எனக்கோர் தந்தி வந்தது. அதில் . . . "தீர்ப்பு விரோதமாக இருந்தால் . . . அப்பீல் செய்யவும்" என்று இருந்தது.

சுமார் 11.30 மணிக்கு கனம் கோர்ட்டார் எங்களை அழைத்தார். எனக்கு இரண்டணா விலையில் "காந்தியார் சாந்தியடைய" என்ற நூல் எழுதியமைக்கு - ஆறு மாத கடுங்காவல் தண்டனையும், ரூ. 500 அபராதமும், கட்டத் தவறினால், மேற்கொண்டு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும், ஆக ஒன்பது மாத கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

**கலியபெருமாள் – து.வி. நாராயணன்**

**ராஜகோபால் – அழகமுத்து**

அண்ணாவின் தந்திப்படி, திருச்சி மாவட்ட நீதிமன்றத்திலே அப்பீல் செய்ய, தீர்ப்பு நகல் வேண்டுமல்லவா?

அதற்காக உடனே எழுதிக் கொடுத்தேன். நகலை வாங்கும் வேலையில் துறையூர் நண்பர்களான ராஜகோபால், அழகு முத்து, மற்றும் மதிப்புக்குரியவர்கள் பலர் ஈடுபட்டிருக்க, மாலை 4 மணிக்கு, நானும், என் நூலை வெளியிட்டு என்னைப் போல் தண்டிக்கப்பட்ட நண்பர் டி.வி. கலியபெருமாள் - இறந்து போன தோழர் து.வி. நாராயணன் அவர்கள் எழுதிய "அழியட்டுமே திராவிடம்" என்ற நூலை வெளியிட்டதற்காக தண்டிக்கப்பட்ட நண்பர் தங்கவேலு, ஆகிய மூவரும், முசிறி ஜெயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டோம். முசிறி சப்-ஜெயிலில் எங்கள் மூவரையும் ஒரே அறையில் மாலை 5 மணிக்கு அடைத்தார்கள்.

சுமார் 1½ மணி நேரம் வழக்கு பற்றியும், தீர்ப்பு பற்றியும், மேற்கொண்டு நடக்க வேண்டியது பற்றியும் மூவரும் பேசிக் கொண்டிருந்தோம். இருட்டு வருவதற்கு முன்பே, கண்களை மூடி, இருட்டை வரவழைத்து நன்கு தூங்க ஆரம்பித்தோம். அன்று தான் நிம்மதியான தூக்கம். இனிமேல் அலைய வேண்டியதிருக்காது என்ற நினைப்பில் அமைதியான தூக்கம். கையை தலையணையாய் - தரையை பஞ்சணையாய் தங்கமான தூக்கம். பூமியைப் பெண்ணுக்கு ஒப்பிட்டிருக்கிறார்களே, உண்மையாகத்தான் இருக்க வேண்டும்! கட்டிலிலே படுத்தால் தான் கண் தூங்கும் என்ற நிலை மாறி, கட்டாந்தரையிலும் தூக்கம் வருகிறது என்றால் அது பூமியின் விசேஷமாகத்தான் இருக்க வேண்டும்.

மறுநாள் வியாழக்கிழமை, சிறைக்கஞ்சி சாப்பிட்டு, மதியம் சாப்பிட்டுவிட்டு, இரவு ஆகாரத்தையும் மாலையே முடித்துவிட்டு, வழக்கம் போல் தூங்கினோம்.

ஜெயில் வாழ்க்கை என்பது எனக்குப் புதியது அல்ல. இந்தி எதிர்ப்பு அடையாள மறியலிலே, முதன் முதலாக விருதுகள் சப்ஜெயிலிலே தண்டனை பெற்று நான்கு நாள் அனுபவம் எனக்கு இருந்தது.

**எழுத்துரிமைக்கு முதலில் சிறை சென்றவர்**

காந்தியார் சாந்தியடைய வழக்கின் சிறைவாழ்க்கை



எனக்கு இரண்டாவது அனுபவமாகும். இனிமேலும் எத்தனை தடவையோ, யார் கண்டது?

ஆனால் - எனக்கும், என் நண்பர்களுக்கும் ஓர் தனி ஆனந்தம். திராவிட முன்னேற்றக் கழகத்திலே, எழுத்துரிமைக்காக முதன்முதலாகச் சிறை சென்றவர்கள் நாங்கள் மூவர்தான்.

வெள்ளிக்கிழமை எங்களை முசிறி சப்ஜெயிலில் சூப்பரெண்ட் திருச்சி ஜெயிலுக்கு அனுப்ப உத்திரவிட்டார். மூன்றாவது சிறையை தரிசிக்கும் சந்தர்ப்பத்தைக் கொடுத்த அந்த அதிகாரிக்கு நான் அந்தரங்கத்திலே நன்றி தெரிவிக்கத்தான் செய்தேன்! காசி, இராமேஸ்வரம் பார்ப்பதைப்போல, பல ஜெயில்களைப் பார்த்துவிட்டால் பகுத்தறிவாதிகளுக்கும் ஓர் திருப்தி ஏற்படுவதுண்டு, பக்தர்களுக்கு ஏற்படுவது போல.

**காப்பு – விலங்கு**

திருச்சி ஜெயிலுக்கு எங்களைக் கொண்டு போக, கையிலே 'காப்பு' போட்டு, கம்பீரமாக நடந்துவரச் சொன்னார்கள் பஸ்ஸ்டாண்டுக்கு. 'காப்பு' என்ற உடனே 'எத்தனை பவுன்' என்று சகோதரிகள் கேட்டுவிடக் கூடாது. 'காப்பு' என்றால் சர்க்கார் பாஷையிலே 'விலங்கு'. அதைப் போட்டு எங்களை அழைத்துச் சென்றார்கள் கௌரவமாக.

முசிறி பஸ் நிலையத்திலே, துறையூர் தோழர்கள் துடிதுடிக்க நின்று கொண்டிருந்தார்கள். எங்களைக் கண்டதும் . . . "சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரெட் அவர்கள் புதன்கிழமை அன்று தீர்ப்பு நகல் தரவில்லை என்றும் வியாழனன்று வேறு ஊருக்கு முகாம் போய்விட்டார் என்றும், இன்றுதான் கொடுத்தார் என்றும் - அப்பீல் செய்ய, திருச்சிக்கு தோழர்கள் விரைந்திருப்பதாகவும் கூறினார்கள்.

**என்.வி. நடராசன்**

முசிறி பஸ், திருச்சி பஸ் நிலையத்தை அடைந்தது. அப்போதுதான், நண்பர் என்.வி. நடராஜன் அவர்கள்,

கட்சியின் சார்பாக என்னை சந்திக்க முசிறி புறப்பட்டுக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும், மகிழ்ச்சி மேலீட்டால் பூரித்தார்; நலம் விசாரித்தார். சென்ட்ரல் ஜெயிலில் செல்லும் பஸ் நிலையம் வரை எங்களை நடத்தியே போலிசார் அழைத்துச் செல்வது கண்டு மனம் புழுங்கினார். மாவட்ட நீதிமன்றம் சென்றுவிட்டு வருவதாக விடைபெற்றுச் சென்றார்.

## இன்றைய கைதி – நாளைய மந்திரி

நானும் பின் நண்பர்களும் திருச்சி சென்ட்ரல் ஜெயிலுக்கு பஸ்ஸில் அழைத்து வரப்பட்டோம். சென்ட்ரல் ஜெயிலைப் பார்த்தவுடனே, பழைய கால மன்னர்களின் கோட்டை கொத்தள நினைவுதான் எனக்கு வந்தது. இன்றைய சிறைச்சாலை மன்னர்களின் - மாவீரர்களின் மாடமாளிகை என்பதில் சந்தேகமென்ன? இன்றைய கைதி, நாளைய மந்திரி! கொஞ்சம் சிந்தனையை செலுத்திப் பார்த்தால் . . . சிறைக்கும் சிங்காதனத்திற்கும் உள்ள உறவை உணர முடியும்.

சிறைக்கு வெளியே காத்திருந்தோம். உள்ளே இருந்து அழைப்பு வந்ததும், செல்ல வேண்டியவர்களாக உட்கார்ந்திருந்தோம். கட்டம் போட்ட மேல் சட்டையும், கால் சட்டையும் போட்டு, தலையிலே ஓர் தொப்பி அணிந்த கைதிகள், தங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலைகளை செய்துவிட்டு இருப்பிடம் நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள்.

எங்களுக்கும் அழைப்பு வருகிற நேரம்; தோழர் என்.வி. நடராஜன், துறையூர், திருச்சி தோழர்கள் எங்களை நோக்கி வந்தார்கள். "அப்பீல் செய்தாகி விட்டது என்றும், நாளை சனிக்கிழமை உங்களைத் தண்டித்த மேஜிஸ்ட்ரேட் அவர்களிடம் அப்பீல் ஆர்டரைக்காட்டி, ஜாமீன் ஆர்டர் வாங்க வேண்டும் என்றும், நாளை சனிக்கிழமை மாலைக்குள் நீங்கள் விடுதலையடைவீர்கள் அல்லது மறுநாள் ஞாயிறு ஓய்வு நாளாக இருப்பதால் திங்களன்று ஜாமீனில் வருவீர்கள் என்றும்" நடராஜன் கூறினார். அதற்குள் எங்களுக்கு அழைப்பு வந்தது; விடைபெற்று உள்ளே சென்றோம். குற்றவாளிகளாக - கைதிகளாக!



விருதுநகரிலும் துறையூரிலும் இருந்த எங்களை 153-A செக்ஷன் என்ற சட்டத்தைக் காட்டி, குற்றவாளிகளாக்கி - அலைய வைத்து- முதலில் முசிரி சிறையிலும், இரண்டாவது திருச்சி சிறையிலும் மிகமிகச் சுலபமாக உள்ளே தள்ளினார்கள். கஷ்டமின்றி அளிக்கப்பட்ட கடுங்காவல் தண்டனையை புன்னகையோடு ஏற்று, காராக்கிரகத்திற்குள் சென்றோம்.

சிறை அதிகாரிகளின் முன்னிலையில் நிறுத்தப்பட்டோம்; எங்கள் ஆடைகளை - எங்களை - எங்களைப் போன்ற கைதிகளை சோதனை போட்டார்கள். அவர்கள் கணக்கிலே எங்களை 'வரவு' வைத்துக் கொண்டதும், 'குவாரன்டைன்' பகுதிக்கு எங்களை அனுப்பி வைத்தார்கள்.

## நிர்வாணமாக நிறுத்தப்படுதல்

குவாரண்டைன் பகுதி தலைமை வார்டர் முன் நிறுத்தப்பட்டோம். மீண்டும் சோதனை செய்ய வேண்டி சட்டை, வேஷ்டி, பனியன், டிராயர் ஆகிய அத்தனையும் அகற்றப்பட்டு நாகரீகமான முறையில் நிர்வாணமாக நிறுத்தப்பட்டோம். சோதனை முடிந்ததும், எங்கள் ஆடைகளை வைத்துக் கொண்டு, கருணையோடு 'கோவணம் கொடுத்து கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். ஒரு மனிதனுக்குக் குறைந்தபட்சம் ஒரு கோவணமாவது தேவை என்பதை திருச்சி சிறையதிகாரிகள் உணர்ந்து வைத்திருந்தமைக்கு அவர்களை அவசியம் பாராட்டத்தான் வேண்டும். 'அரசனும் ஆண்டியாவான்' என்ற பழமொழி உண்மையை திருச்சி சிறையிலே தான் பிரத்தியட்சமாகக் கண்டேன். கோவனாண்டிகளை சிருஷ்டிப்பது தான் திருச்சி சிறையதிகாரிகளின் தீவிரக் கொள்கையோ என்று சந்தேகப்பட்டேன். ஏனெனில், குவாரண்டைன் பகுதியிலே 'கோவண'க் கைதிகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

### கோவணத்தோடு சிறையில்

வெறும் கோவணத்தோடு, எங்கள் மூவரையும், தனித்தனி அறையிலே அடைத்தனர். அப்போது கதிரவன் அடிவானத்திலே மறைந்தான். அக்கிரமச் செயல்களைக் காணச் சகியாத அவமானத்தாலோ, அன்றி அஸ்தமன நேரத்தாலோ, வேறு காரணத்தாலோ ஆதவன் மறைந்திருக்கலாம்! ஆனால் .... அந்த மறைவு, அந்த காரத்திற்கு அழைப்பு என்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது.

மறுநாள் காலை சனிக்கிழமை. சிறையில் கொடுக்கப்பட்ட சிறந்த உணவை ருசித்துவிட்டு, தலைமை வார்டரின் முன் வந்தோம். மொட்டையடித்துக் கொள்ள வேண்டும் என்று வாய் வலிக்காமல் வார்டர் கூறினார். குற்றவாளி அல்ல என்று நிரூபிக்க, அப்பீல் செய்திருப்பதாகவும் இன்று அல்லது நாளை மறுதினம் திங்கட்கிழமை ஜாமீனில் போவதாக இருக்கிறோம் என்று சொன்னோம்.

### மொட்டையடிக்கப்படுதல்

நீங்கள் எது செய்தாலும் எனக்குக் கவலையில்லை. இப்போது நீங்கள் கைதிகள். இன்று மொட்டையடித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்று மீண்டும் வார்டர் கூறினார். நாங்கள் ஜாமீனிலே வெளியே போக இடையிலே ஒரே ஒரு நாள் தானே இருக்கிறது. அதற்குள் மொட்டையடிக்க வேண்டிய அவசியமும் அவசரமும் என்னவென்று கேட்டோம். அதெல்லாம் எனக்குத் தெரியாது. மொட்டையடிக்கும்படி உத்திரவு என்று வார்டர் உறுதியாகச் சொன்னார்.

அதிகாரிகளின் உத்திரவுகளுக்கு அடிபணிய வேண்டும் என்பது நம் தலைவர்களின் கட்டளையல்லவா? சிரமசைத்து இசைந்தோம். சிரம், நீட்டச் சொன்னார்கள். சிரமமின்றி சில வினாடிகளில் தலையைச் சுத்தம் செய்து பண்டாரமோ என்று கண்டோர், விண்டிடும் விசித்திர நிலையை உண்டாக்கினார்கள். என்னே, அவர் தம் பெருமை!



அன்னொறரு நாள் யாரோ பாடக் கேட்டிருக்கிறேன். "அரைக்கீரைத் தைலமிட்டு, அருமையாக நான் வளர்த்த குடுமியதை - முளைக்கீரை பிடுங்குவது போல் . . ." என்று அந்தப்பாட்டு நீண்டு கொண்டு செல்லும்! இந்தப் பாட்டு பொருந்துமோ பொருந்தாதோ, அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் ஒன்றே ஒன்று மாத்திரம் நிச்சயம்; எதையும் சிதைத்து விடுவது மிகமிகச் சுலபம்; ஆனால் சீராக்குவது வெகு சிரமம்.

### காலரா ஊசியும் போட்டனர்

ஞாயிற்றுக்கிழமையன்று ஜெயில் டாக்டர் வந்தார்; மான்புள்ளிகளைப் போல், அந்த டாக்டர் உடம்பெல்லாம், ஏதோ கருப்பும் வெள்ளையுமாக புள்ளிகள் இருந்தன. கைதிகளும் மனிதர்கள்தான் என்ற நினைப்பே அவருக்கு இருந்திருக்காது என்றுதான் நினைக்கிறேன்; கூண்டிலே அடைபட்ட புலியிடம், வெளியே நின்று குத்தி விளையாடுவது போல வார்த்தையாடினார். அன்று எங்களுக்கு 'காலரா' ஊசி போடப்பட்டது.

### அன்பில் தர்மலிங்கம் – வானமாமலை – சாம்பு

அடுத்தநாள் திங்கட்கிழமை. எங்களை ஜாமீனில் அழைத்துச் செல்ல, துறையூர் ராஜகோபால் அழகுமுத்து அம்பில் தர்மலிங்கம் திருச்சி வானமாமலை சாம்பு போன்ற தோழர்கள் வந்திருந்தனர். முதலில் மொட்டைத் தலையோடு எங்களை பேட்டி கண்டு பேசினர். சுமார் இரண்டு மணியளவில், விடுதலை செய்யப்பட்டோம்.

எங்கள் நிலையை நாட்டுக்கு விளக்கிட பத்திரிகைக்காரர்கள் எங்களைப் படம் பிடித்தனர். பத்திரிகைகளில் துண்டுப் பிரசுரங்களில், எங்கள் பண்டாரப் படங்கள் பிரசுரிக்கப்பட்டு சர்க்காரின் போக்கு கண்டித்து எழுதப்பட்டிருந்தது; நடந்த கூட்டங்கள் மாநாடுகளில் கண்டனத் தீர்மானங்கள் போடப்பட்டன.

**கைலையானந்தர் – விருத்தாச்சலம்**

இதற்கிடையில் திருச்சி செஷனில் அப்பீல் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எங்களுக்காக திருச்சி பிரபல வக்கீல்களான கைலையானந்தர் பி.ஏ., பி.எல்., அவர்களும், விருத்தாசலம் எம்., ஏ. பி.எல்., அவர்களும் வாதாடினார்கள். நாலைந்து வாய்தாக்களில் வழக்கு முடியும் கட்டம் வந்தது.

அன்று தீர்ப்புக்காகக் காலையிலேயே கோர்ட்டுக்கு வந்தோம், இயக்கத் தோழர்களும் நண்பர்களும்கூட வந்தனர். கனம் நீதிபதியார்கள் காலையிலேயே தீர்ப்பு சொல்லாமலிருந்ததால் . . . 'விடுதலை இல்லை' என்பதை மட்டும் நன்கு உணர்ந்தோம். மாலை மூன்று மணிக்கெல்லாம், போலீஸ் வேனும், ரிசர்வ் போலீசாரும், கைவிலங்கோடு கோர்ட்டுக்கு வந்தனர்; தண்டனை நிச்சயம் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டோம். மாலை ஐந்து மணிக்கெல்லாம் அழைக்கப்பட்டோம்.

ஆறு மாதக் கடுங்காவல் என்ற பழைய தண்டனை ஒரு மாதம் வெறுங்காவலாகவும், ரூ. 500 அபராதம் ஊர்ஜிதம் என்றும், ஆனால், அது கட்டத் தவறினால் மேற்கொண்டு ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனை என்றும், எங்களுக்குத் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில்.

**திருச்சி சப்ஜெயிலில்**

உடனே போலீசார் கையிலே, விலங்கு மாட்டினர். போலீஸ் வண்டியில், நண்பர்களிடம் விடைபெற்று, புறப்பட்டோம். புது ஜெயிலுக்கு, திருச்சி சப்-ஜெயில் எப்படி இருக்கும் என்று எங்களுக்குத் தெரியாதல்லவா? அந்த அனுபவத்தையும், அரசாங்கம் எங்களுக்கு அளித்தது. அன்று இரவு திருச்சி சப்-ஜெயிலிலே வழக்கம் போல் நன்கு தூங்கினோம்.

மறுநாள் காலை 11 மணிக்கு, சாப்பாடு போட்டுவிட்டு, பழைய சென்ட்ரல் ஜெயிலுக்கே எங்களை அனுப்ப போலீசார் வந்தனர். கூடப்புறப்பட்டோம்; கையில் விலங்கு போடப்பட்டபடி சப்-ஜெயிலுக்கு வெளியே வந்தோம்.



போலீசாரின் வண்டி சுமார் இரண்டு மணி நேரமாக வரவில்லை. விலங்கு போட்ட காட்சியோடு, வீதியில் நின்றோம். அப்புறம் வண்டி வர சென்ட்ரல் ஜெயில் வந்து சேர்ந்து, பழைய 'குவாரண்டைன்' பகுதிக்கே எங்களை அனுப்பி வைத்தார்கள். என்ன நினைத்தார்களோ, மீண்டும் மொட்டையடிக்கவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து, என் நண்பர்கள் சிறையிலே பேட்டி காண வந்தார்கள். சென்னை உயர்நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்யும் முயற்சி நடந்து கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அப்பீல் வேலையும் நடக்கட்டும், முப்பது நாள் சிறை வாழ்க்கையையும் முடித்துவிடுகிறேன் என்று சொல்லி அனுப்பினேன்.

பத்து நாட்கள் வரை குவாரண்டைன் பகுதியிலே இருந்தோம். முன்போல கோவணாண்டியாக அல்ல, எங்களுடைய ஆடைகளையே அணிந்தபடி. பின்னர் பெரிய ஜெயிலுக்குள்ளே புகுந்தோம். அது ஒரு கிராமம் போல காட்சியளித்தது. இரண்டாயிரம் கைதிகள் வரை உள்ளே இருந்தனர். எங்களைத் தெரிந்தவர்கள் எண்ணற்றவர் இருந்தார்கள். எங்களுக்குச் சேவை செய்ய 'நான் நீ' என்று முந்திக் கொண்டு வந்தார்கள்; எங்களுக்கு ஒரே உற்சாகம். உள்ளே; பொழுதே போவது தெரியாமல் உல்லாசமாக இருந்து வந்தோம். தண்டனை காலம் முடிந்தது. விடுதலை அடைந்தோம். மக்கள் வரவேற்று, வாழ்த்தினர் எங்களை.

**அரசாங்க அறிக்கை**

ஆனால் . . . எங்களை 'மொட்டை'யடிக்கவில்லை என்று அரசாங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டது; ஆச்சரியப் பட்டோம்; அரசாங்க அறிக்கையை மறுத்து, மொட்டையடிக்கப்பட்டதை நேர்மையான விசாரணையின் மூலம், நிரூபிக்க முடியும் என்று நான் ஓர் அறிக்கை வெளியிட்டேன்.

சேலம் சப்கலெக்டர் என்னை அழைத்து விசாரித்தார்; கைதிகளில் சிலரையும், கண்யமானவர்களின் பெயரையும்

கொடுத்தேன். அரசாங்கத்தினர் விசாரிப்பர் என்று இருந்தேன். ஆனால் அவ்விசாரணை இன்னும் முடிந்ததோ முடியவில்லையோ எனக்குத் தெரியாது; முடிவும் அறிவிக்கப்படவில்லை.

### A. துரைராஜ்

சென்னை உயர்நீதி மன்றத்திலே என் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனக்காக திரு A. துரைராஜ் பி.ஏ., பி.எல்., அவர்கள் வாதாடினார். நான் விடுதலை செய்யப்பட்டேன்; அபராதம் கட்டியிருந்தால் . . . திருப்பிக் கொடுக்கும்படி அரசாங்கத்திற்கு நீதி மன்றம் உத்திரவிட்டது.

153-A செக்ஷன்படி சட்டத்தைக் காட்டி குற்றவாளி என்ற பட்டத்தைச் சூட்டி, கைதி என்ற மகுடம் மாட்டி, சிரமம் இன்றி சிறையிலே என்னைத் தள்ளியது அரசாங்கம்.

ஆனால் . . .

குற்றவாளியாக்கப்பட்ட நான் நிரபராதி என்று நிரூபிக்க இரும்புக் கால்களால் கோர்ட்டுக்கு நடந்தேன்; வக்கீல்களைப் பார்த்தேன்; முசிரி ஜெயிலைப் பார்த்தேன்; திருச்சி சிறையைத் தெரிசித்தேன்; நிர்வாணமாக நிறுத்தப்பட்டேன்; தலை மொட்டையடிக்கப்பட்டேன்; செஷன்ஸ் கோர்ட் படிகளிலே ஏறி, ஏறி இறங்கினேன்; திருச்சி சப்ஜெயிலையும் சந்தித்தேன்; இரும்புக் காப்புகளின் கோரப் பிடியிலே கைகளைக் கொடுத்தேன்; மொத்தத்தில் முப்பது நாள் இருட்டறையில் இருந்தேன்; ஐகோர்ட்டுக்கு புது வக்கீலை பிடித்தேன்; இத்தனையும் செய்த பிறகுதான் . . . என்னால் நிருபிக்க முடிந்தது . . . நான் குற்றவாளியல்ல. கைதியல்ல. தண்டிக்கப்பட வேண்டியவனல்ல!

### நீதியின் பாதை நெடுந்தூரத்திலே

எனக்கும் என்னைப் போன்ற எவருக்கும் நீதியின் பாதை நெடுந்தூரத்திலே இருக்கிறது. நீதியின் எல்லையைத் தொட, எத்தனையோ தொல்லைகள் - அதனைக் கடக்க மனதிலே தைரியம் மட்டுமல்ல, பையிலே பணமும் இருக்க வேண்டும்.



நீதியின் எல்லையை ஏழைகள் என்றும் தொட முடியாது என்பது நான் கண்ட உண்மை.

### திராவிட நாட்டில் அறிஞர் அண்ணா

*30.07.1950* நாளிட்ட 'திராவிட நாடு' முதல் பக்கத்தில் ஆசைத்தம்பி, கலியபெருமாள், நாராயணன் ஆகிய மூன்று பேரும் மொட்டையடிக்கப்பட்ட நிலையில் படம் வெளியிடப்பட்டுள்ளது.* 'அகிம்சா ஆட்சியின் அழகினைப் பார்' என்று அண்ணா தலைப்பிட்டார். திடுக்கிடாதீர்கள்! - நூல் எழுதிய குற்றத்திற்காகவும், அவைகளை பிரசுரித்த குற்றத்திற்காகவும் தண்டனை பெற்ற தோழர்கள் ஆசைத்தம்பி, கலியபெருமாள், தங்கவேல் ஆகியோரை இந்த ஆளவந்தாரின் 'கருணை' ததும்பிய ஆட்சி நடத்தியிருக்கும் முறை இது!

மொட்டையடித்திருக்கிறது! - சாதாரண கிரிமினல் கைதிகளைவிடக் கேவலமாக நடத்தியிருக்கிறது. நண்பர் ஆசைத்தம்பி, விருதுநகர் மக்களின் பிரதிநிதி - 'தனியரசு' மாதப் பத்திரிகையின் ஆசிரியர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு உறுப்பினர். அவரை இந்த முறையில் அலங்கோலமாக்கி இருக்கிறது, அரசாங்கம்!

இத்தனைத் துயரங்களைத் தாங்கியதற்குப் பின்னரும் அவர் ஆற்றிய அரும்பணிகள் . . . அவர் எழுதி வெளியிட்ட நூல்கள் . . . இதோ . . .

### ஆசைத் தம்பியின் படைப்புக்கள்

அரசின் அடக்குமுறையைக் கண்டு அஞ்சிடாமல் ஆசைத் தம்பி எழுதிக் குவித்த கதைகள், தொடர் நாவல்கள், எழுச்சி தரத்தக்க நூல்கள் இத்தனையும் ஒரு சில ஆண்டுகளுக்குள் ஆம்! ஆசைத்தம்பி *1953*-க்குள் எழுதிக் குவித்த நூல்கள் பட்டியல் இதோ . . .

| | |
|---|---|
| **திராவிடர்கள்** | **பயங்கர வாழ்வு** |
| **காந்தியார் சாந்தியடைய** | **அன்பழகன் ஆட்சி** |
| **விந்திய வீரன்** | **டாக்டர்** |

* **நூலின் பின்பக்க அட்டையில் உள்ள படம்**

| | |
|---|---|
| திராவிட இயக்கம் ஏன்? | காமராஜர் |
| இரவில் வந்தவள் | வறண்ட வாழ்க்கை |
| ஆண்களை நம்பலாமா? | நாம் இருவர் |
| வழக்குத் தீர்ப்பு | அறைகூவல் |
| சென்னையில் ஆசைத்தம்பி | மக்கள் சக்தி |
| முத்துக் குவியல் | அறிவுரைகள் |
| மலர்த் தோட்டம் | இருண்ட வாழ்வு |
| அவள் வாழ்வு | கொலைகாரி |
| வாழ்க்கை வாழ்வதற்கே | சிகாகோ சம்பவம் |
| நடமாடுங் கல்லூரி | தியாகச்சுடர் |
| நினைவுச் சுழல் | கிழக்கும் மேற்கும் |
| வெறுங்கூடு | பிணங்கள் |
| கசப்பும் இனிப்பும் | மனித தெய்வம் |
| மழை | முள் |
| மனைவி | சிலந்திக்கூடு |
| தனியரசு ஏன்? | வெயிலும் நிழலும் |
| என் மாமி | கேட்கவில்லை |
| காதலும் கண்ணீரும் | காதல் மாளிகை |
| அரச குமாரி | கசந்த கரும்பு |
| அழகு எரிந்தது | எகிப்திய எழுச்சி |

இந்த நூல்கள் இயக்கத் தோழரிடையே எழுச்சியை உண்டாக்கியது.

## பயங்கர வாழ்வு

ஆசைத்தம்பி எழுதிய சிறுகதைகள் 'இரத்தக் கல்யாணம்', 'நிரபராதி', 'யார் குற்றவாளி?' ஆகிய கதைகள் 51 பக்கங்களில், 1949-இல் 'பயங்கர வாழ்வு' எனும் தலைப்பில் நூலாக வெளிவந்தது. எட்டணா விலையில் திருச்சி துறையூர் எரிமலைப் பதிப்பகம் அதனை வெளியிட்டது. தொடர்ந்து ஆசைத்தம்பியின், 'காந்தியார் காந்தியடைய' நூலை



வெளியிட்ட இதே பதிப்பகம் அரசாங்கத்தின் அடக்குமுறைக்குள்ளாயிற்று.

## கசந்த கரும்பு

'பராசக்தி' கதை எந்த இடத்தில் முடிக்கப்பட்டதோ அந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய கதைதான் இது. இதற்கும் பராசக்திக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. இது ஓர் தனிக்கதைதான். குணசேகரன் தங்கை கல்யாணியின் வாழ்வின் பிற்பகுதியும் கசந்த கரும்பாகியது என்பதை, ஆசைத்தம்பியின் கற்பனைப் பூங்காவில் மலர்ந்த சொற்சித்திரம் 'கசந்த கரும்பு'. இந்த நாவல் 179 பக்கங்களைக் கொண்டு, 1954-இல் சென்னையில் வெளியாயிற்று.

## எகிப்திய எழுச்சி (1954)

சென்னை கே.ஜி. பிரஸில் அச்சிட்டு 'எண்ணப் பூங்கா' பதிப்பகத்தார் 'எகிப்திய எழுச்சி' நூலினை 1954-இல் வெளியிட்டனர்.

'தமிழகத்தைத் தன் வீரமொழிகளாலும் எழுத்துத் திறமையினாலும் வீறு கொண்டெழுந்து மறுமலர்ச்சிப் பாதையில் முன்னேறி நடந்திடத் தட்டியெழுப்பிடும் விருதை வீரர் ஆசைத்தம்பியின் கருத்தோவியத்தைத் தமிழகத்தின் பயன் கருதி வெளியிடுகின்றோம் என்ற குறிப்போடு வந்த அந்த நூலிலிருந்து சில வரிகள் ...

## மக்கள் சக்தி – மகத்தான சக்தி

'மக்கள் சக்தியே, மாநிலத்தில் மகத்தான சக்தி என்பதை எடுத்துக்காட்டிவிட்டது எகிப்திய எழுச்சி.

மக்கள் சக்தியை மதபோதகர்களின் பாவ புண்ணிய போதனைகளாலும், ஏழை பணக்காரன் என்ற வேற்றுமையினாலும், படைபலத்தாலும் அதிகார ஆட்சிப் பலத்தினாலும் அடக்கியாள நினைப்பது நடவாது என்பதை உலகுக்கு முரசறைந்து ஒலித்துக் காட்டிவிட்டது எகிப்திய எழுச்சி.

மக்களின் ஒருமனப்பட்ட, பண்பட்ட சக்தி திரண்டு விட்டால் இரத்தச் சேதமின்றி எதையும் சாதித்திட முடியும் என்பதை எகிப்திய எழுச்சி அறிவுறுத்துகின்றது.

எகிப்திய எழுச்சியை எண்ணிப் பார்த்து தமிழகமும் தனது சக்தியை ஒன்றுதிரட்டி இரத்தச் சேதமின்றி, நல்ல முறையில் தன்னாட்சி - தனியாட்சி - தனியரசு செலுத்திடத் தயாராக வேண்டும்"

**திரை உலகில்**

மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாக்காவில் பணியாற்றிய ஆசைத்தம்பி, அந்த நிறுவனத்தார் தயாரித்த ஆங்கிலத் தழுவலான ஒரு கதைக்கு வசனம் எழுதினார். புரட்சி நடிகர் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் நடித்த 'சர்வாதிகாரி' என்ற திரைப்படம்தான் அது. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வசனம் எழுதிய 'வளையாபதி' படத்திற்கும் சில காட்சிகளுக்கு ஆசைத்தமபி வசனம் ஏழுதியுள்ளார்.

**நகரசபை கவுன்சிலர்**

விருதுநகர் நகரசபை கவுன்சிலராக ஐந்தாண்டுகள் பணியாற்றியவர் ஆசைத்தம்பி.

**திராவிட சினிமா**

தனிஅரசு இதழை நடத்திய ஆசைத்தம்பி, *1958* முதல் *1963* வரை அதனை நாளேடாவும் நடத்தினார். 'திராவிட சினிமா' என்னும் இதழையும் நடத்தியவர் ஆசைத்தம்பி.

**அண்ணா காட்டும் அறப்போர்**

*1953* மே திங்களில் ஆசைத்தம்பி எழுதி வெளிவந்த நூல் 'நடமாடுங் கல்லூரி'. அதில் 'அண்ணா காட்டும் அறப்போர்' எனும் தலைப்பில் ஆசைத்தம்பி சொல்கிறார்.

"பதவி மோகத்தால் உன் இன்ப வாழ்வை - உன் தாயகத்தின் நல்வாழ்வை - வதைக்கக் கங்கணம் கட்டிக் கொண்டு உலாவும் உலுத்தர்களைக் கண்டு ஏங்காதே! அஞ்சாதே! எழுந்து நில்! எழுந்து நில்! விசையுடன் நட; தலை



நிமிர்ந்து பார்! உன் கண்களில் தோன்றும் அறப்போர் நம் அண்ணா காட்டும் அறப்போர் - இருக்கிறது. உன் நலிந்த காலை நிமிர்த்தி வைக்க - உன் வளைந்த இடுப்பை சரிபடுத்த!

எழில் மிக்க திராவிடம் உங்கள் உழைப்பைக் கேட்கிறது - உங்களுடைய வீரத்தால்தான் தன் தளைகள் ஒடிந்துபடும் என்று நம்புகிறது. அந்தத் திருப்பணிக்கே, உங்கள் ஆற்றல் பயன்படட்டும் . . ." கருத்திலே நாட்டங் கொண்டு சிந்தித்துப் பார்; ஆரஅமர சிந்தித்துப் பார்! உன் சிந்தனையில் உன் கருத்தில் பூப்பது தான். உரிமை வேட்கை. உண்மையான உரிமை வேட்கை. அதை அடைய வழி காட்டுவது அண்ணா காட்டும் அறப்போர் . . .

திராவிடச் சிங்கமே! புலியைப் போலச் சீறி வா! சிறுத்தையைப் போல பாய்ந்து வா! வீரம் நிறைந்த ஏறு போல முன்னுக்கு வா! உன் முன்னோர்களின் சரித்திரத்தில் மலிந்துள்ள வீரச் செயல்களுக்கு நீ ஒரு எடுத்துக்காட்டாக இரு! அஞ்சாத நெஞ்சத்தோடு ஆற்றல் நிறைந்த உடலோடு வா! எங்கே? அண்ணா காட்டும் அறப்போருக்கு!

**அறிவுப்படை திரளட்டும்**

இன விடுதலைக்கான, இன அரசுக்கான அறப்போர் - அண்ணா காட்டும் அறப்போர் நடத்திட நம்மை நாம் தயாரித்துக் கொண்டு வருகிறோம். மேலும் தயாராகி வர வேண்டும்! அறிவுப் படை திரளட்டும்! அறப்போர் நடத்திட முதலில் அறிவுப்படை திரள வேண்டும். நாடெங்கும் திரட்டப்பட வேண்டும்;

**மக்களைத் தயார் செய்திட . . .**

அறப்போர், அறப்போர்க்களத்திலே அணிவகுத்து நின்றிடும் அறிவுப்படையை - அறிவு ஆயுதத்தை இன உரிமை உணர்ச்சியை, மக்களிடையே ஊட்டி, மக்களைத் தயார் செய்தாக வேண்டும்.

மக்கள் அனைவரும் அறிவுப்படை வரிசையிலே அணிவகுத்து நின்றிடும் நிலை மனநிலை - எண்ணத் தெளிவு

பெற்றால்தான் பெற்றிடும்படி செய்தால்தான் முழுப் பயனையும் காணமுடியும்" பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரைப் போலவே பேசிடும் ஆற்றல் பெற்ற வாலிபப் பெரியார் ஆசைத் தம்பியின் படைப்புக்களிலிருந்து ஒரு சில துளிகள் இவை.

சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல் களங்களில் ஆசைத்தம்பி பெற்ற அபார வெற்றிகள் . . .

### தேர்தல் களங்களில் ஆசைத்தம்பி

1957 சட்டமன்றத் தேர்தல் களம். அறிஞர் அண்ணாவின் கழகம் முதன்முறையாக களங்கண்டது. அந்தத் தேர்தலில் ஆசைத்தம்பி போட்டியிட விரும்பிய தொகுதி சென்னை வண்ணாரப் பேட்டை தொகுதி ஆகும். ஆனால் அறிஞர் அண்ணாவின் முடிவோ வேறுவாக இருந்தது.

### ஆயிரம் விளக்கு

தம்பீ! இந்த ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிடும் அறநிலையத்துறை அமைச்சர் வேங்கடசாமி நாயுடு மக்களிடம் நேரில் சென்று வாக்கு கேட்காமலேயே வெற்றி பெற்று வருகிறார். உனது சிறந்த பேச்சாற்றலால் இந்தத் தொகுதி வாக்காளர்கள் கவனம் திரும்பினால் அமைச்சர் வேங்கடசாமி வீட்டைவிட்டு வீதிக்கு வந்து மக்களிடம் வாக்கு கேட்கும் நிலையாவது ஏற்படுமே, என்றுதான் உன்னை தேர்வு செய்து இருக்கிறேன்" என்று ஆசைத்தம்பியிடம் அறிஞர் அண்ணா கூறினார்.

அண்ணாவின் விருப்பப்படியே ஆசைத்தம்பி ஆயிரம் விளக்கில் களம் இறங்கினார். கடும்போட்டி, தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் மக்களின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பிய ஆசைத்தம்பி, தேர்தலில் அமோக வெற்றி பெற்றார்.

ஏ.விபி: ஆசைத்தம்பி 17632

வேங்கடசாமி நாயுடு (காங்) 14970



2662 வாக்குகள் வித்தியாசத்தில் வியப்பில் ஆழ்த்திய வெற்றியைப் பெற்ற ஆசைத் தம்பி தனது நகைச்சுவையும், வீரச்சுவையும் ததும்பிய பேச்சாற்றலால் தமிழக சட்டசபையை கலகலப்பாக்கினார்.

1961-களில் கழகத்தில் பிளவு EVK சம்பத், கவியரசு கண்ணதாசன் தலைமையில் சிலர் விலகல்; ஆசைத்தம்பியும் அரசியலை விட்டு சற்று ஒதுங்கியே இருந்தார்.

### 1967 பொதுத் தேர்தல்

1962 பொதுத் தேர்தலில் பேராசிரியர் அன்பழகனை (27, 666 வாக்குகள்) வீழ்த்தி ஜோதி வெங்கடாசலம் (காங்கிரஸ்) (29283 வாக்குகள்) அமைச்சரானார். 1967 தேர்தலில் செல்வாக்குடன் இருந்த அமைச்சர் ஜோதி வெங்கடாசலத்தை எதிர்த்து எழும்பூரில் ஆசைத் தம்பி களங் கண்டார்.

### எழும்பூர்

ஏ.வி.பி. ஆசைத்தம்பி 36133 வாக்குகள்; ஜோதி வெங்கடாசலம் 29187 வாக்குகள்; ஜார்ஜ் சாமுவேல் 1350 வாக்குகள்; ஆசைத்தம்பி அமோக வெற்றி பெற்றார். இம்முறையும் அமைச்சர் ஒருவரை களத்தில் வீழ்த்திக் காட்டினார்.

### பூங்கா நகர்

திராவிட இயக்கத் தூண்கள் நூலில் க. திருநாவுக்கரசு, 1999 மே 1 பதிப்பு, பக்கம் 284 தரும் தவறான தகவல் இதோ:

'1971-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆசைத்தம்பி வெற்றி பெற்று, சட்டமன்ற உறுப்பினரானவுடன் . . .'

### 1971–ஆம் ஆண்டு தேர்தல்

1967-இல் பூங்கா நகர் தொகுதியில் டி.என். அனந்த நாயகியை தோல்வி காணச் செய்தவர் எச்.வி. ஹண்டே. இவரே 1971 தேர்தலில் பூங்கா நகரில் போட்டியிட்டார். இவரை எதிர்த்து களங்கண்டவர் ஆசைத்தம்பி.

தேர்தல் முடிவு வெளியானபோது 5287 வாக்குகள் வித்தியாசத்தில் ஆசைத்தம்பி டாக்டர் எச்.வி. ஹண்டேயிடம் தோல்வியடைந்தார். ஆசைத்தம்பி அரசியல் வாழ்வில் சந்தித்த ஒரே தேர்தல் தோல்வி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. (பா. ஆரிச்சன், கடும்போட்டியில் தேர்தல் களம் கண்டவர்கள், 2005, ப. 34) எச்.வி. ஹண்டே பெற்ற வாக்குகள் 30743 ஏ.வி.பி. ஆசைத்தம்பி பூங்கா நகரில் பெற்ற வாக்குகள் 25456. இதுவே வரலாற்று உண்மையாகும்.

## நெருக்கடி நிலைப் பிரகடனம் – மிசா

தமிழகத்தில் நெருக்கடி நிலைப் பிரகடனம் கழக ஆட்சி கவிழ்ப்பு - மிசா சட்டத்தின் கீழ் நூற்றுக்கணக்கானோர் சிறைவாசம் ஏ.வி.பி. ஆசைத்தம்பியும் 'மிசா'வில் கைது செய்யப்பட்டார். 1977-இல் நெருக்கடி நிலை தளர்ந்தது. பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. தேர்தல் களத்தில் ஆசைத்தம்பி பங்கேற்றார்.

## 1977 வடசென்னை நாடாளுமன்றத் தொகுதி

வட சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளராக நாஞ்சில் கி. மனோகரன் 1977-இல் போட்டியிட்டார். அவரை எதிர்த்து ஏ.வி.பி. ஆசைத்தம்பி களத்தில் குதித்தார்.

## ஒற்றைக் குரல்

39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 4 தொகுதிகளில் மட்டுமே கூட்டணி வெற்றி கண்டது. மத்திய சென்னையில் பா. இராமச்சந்திரனும், வேலூரில் ப. தண்டாயுதபாணியும், நாகர்கோவிலில் குமரி அனந்தனும் ஜனதாகட்சி (ஸ்தாபன காங்கிரஸ்) சார்பில் வெற்றி பெற்றனர். வடசென்னைப் பாராளுமன்றத் தொகுதியில் ஏ.வி.பி. ஆசைத்தம்பி வெற்றி பெற்றார்.

| | |
|---|---|
| ஏ.வி.பி. ஆசைத்தம்பி | 2,50,852 |
| கி. மனோகரன் | 2,05,749 |



45,103 வாக்குகள் வித்தியாசத்தில் ஆசைத்தம்பி தன்னந் தனியாக கழகத்தின் சார்பில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்தில் நமது குரலை ஒலித்தார்.

அரசியலில் வாழ்வில் ஆசைத்தம்பி வாழ்ந்த காலங்கள் சொற்பம்; ஆனால் அவர் பெற்ற தேர்தல் வெற்றிகள் தமிழக அரசியல் களத்தில் திருப்பம் என்பதை வரலாற்றில் மறைக்க முடியாது.

## அந்தமானில்

நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.வி.பி. ஆசைத்தம்பி அந்தமான் தீவுகளுக்கு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்றார் 06.041979.

கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுவிட்டு நடந்து வரும்போது களைப்பாக இருப்பதை உணர்ந்தார்; மனைவி பரமேஸ்வரி அம்மையாரிடம் தெரிவித்தார்.

06.04.1979 காலையிலேயே அவருடைய தலையில் உள்ள இரத்தக் குழாய் சிறிதளவு வெடித்து அது அவருக்கே தெரியாமல் அவர் கண்ணை மறைக்கும் அளவிற்கு வந்திருந்தது. இதனை அறியாத அவர், பிற்பகல் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்றார். 45 நிமிடங்கள் உரையாற்றினார். ஆனாலும் பார்வை அவருக்குத் தொடர்ந்து மறையத் தொடங்கியது.

## இறுதி வரை இயக்க நிகழ்ச்சிகளில்

நிகழ்ச்சிகளை இரத்து செய்துவிடலாம் என்று தோழர்கள் கூறினர்.

'வேண்டாம்; நிகழ்ச்சிகள் தொடரட்டும் வருகிறேன்' என்று கூறிய ஆசைத்தம்பி, படகில் ஓய்வு எடுத்தவாறே நிகழ்ச்சிகளில் பங்கேற்கச் சென்றார்; அவரது கண் பார்வை அறவே தெரியாமல் ஆகிவிட்டது.

## ரத்தநாளம் வெடிப்பு

எவ்வித வலியுமில்லாமல் இவைகள் நடக்கிறது. மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்;

மருத்துவர்கள் பரிசோதித்துப் பார்த்தனர்; ரத்தநாளம் வெடித்திருக்கும் உண்மையை உரைத்தனர். இங்குள்ள மருத்துவமனையில் இந்த வசதி போதாதே என்று கூறிய டாக்டர்கள் திரும்ப அழைத்துச் செல்வது தான் நல்லது என்று கூறுகின்றனர்.

**மூன்று நாட்களுக்குப் பின்**

போதிய மருத்துவ வசதி இல்லாத அந்தமானில் அகப்பட்டுக் கொண்டோமே என்று தனது மனைவியிடம் கூறினார். அதே மருத்துவமனையில் மறுநாள் 07.04.1979 இரவு 8 மணி ஆசைத்தம்பியின் வாழ்க்கை நிறைவிற்கு வந்தது.

10.04.1979 விமானம் மூலம் சென்னைக்கு அவரது உடல் கொண்டு வரப்பட்டது. பொதுமக்கள் பார்வை - அஞ்சலிக்குப் பின் அன்று மாலை இறுதிப் பயணமும் முடிவுற்றது.

திராவிட இயக்க வரலாற்றில் இதழாசிரியராக, தினசரி ஏட்டின் ஆசிரியராக, எண்ணற்ற கதைகளை, கட்டுரைகளை, எழுதிக் குவித்த மேதையாக, நகர்மன்ற உறுப்பினராக, சினிமா வசனகர்த்தாவாக, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றி மறைந்த ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் புகழும் பெயரும் நிலைத்து நிற்கும் வண்ணம் அவரது இயக்கப் பணிகளை அனுதினமும் நினைவிற் கொள்ள வேண்டும்;

**நூல்கள் மறுபதிப்பு**

இலட்சியவாதியான அவரது தியாகத்தை இன்றைய இளம் தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வண்ணம் அவரது செயல்களை, பணிகளை எடுத்துச் சொல்ல வேண்டும். எது வரினும் அஞ்சாது தனது கருத்துக்களைத் துணிவுடன் சொல்லிய அஞ்சா நெஞ்சர் ஆசைத்தம்பியின், வரலாற்றுக் குறிப்புகள் அரவது நூல்கள் திரும்பவும் மறுபதிப்புச் செய்யப்பட வேண்டும்.

அதுவே அவருக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன் ஆகும். அத்தோடு, இன்றைய இளைய சமுதாயத்தினருக்கும் இயக்கத்தின் இலட்சிய வரலாற்று உண்மைகளை நினைவூட்டிடவும் அதுவே சரியாக அமையும்!



REGD NO. M. 6081
ஆண்டுச் சந்தா ரூ. 3
2
NI ARASU
தனி அரசு
Editor: A.V.P. ASAITHAMBI
10—8—'53
விருதுநகர் (மாதமிருமுறை)
காந்தியார் சாந்தி அடைய
ஆசைத்தம்பி
வழக்கு தீர்ப்பு
தனி அரசு
இதழ் 17
26—9—1953
விருதுநகர்